WMC
කාන්තාව සහ මාධ්‍ය සාමූහිකය
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
Women and Media Collective
Established 1984

SSA SOCIAL SCIENTISTS' ASSOCIATION

# தெற்காசியாவில் ஊதியமற்ற பராமரிப்புப் பணி மற்றும் பெண்களின் உழைப்பு என்பவற்றை அங்கீகரிப்பதில் சமத்துவம் மற்றும் ஒப்புரவு பற்றிய

# பிராந்திய மாநாடு

**இலங்கை சமூக விஞ்ஞானிகள் கழகத்தின் ஒத்துழைப்புடன் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

**இம்மாநாட்டில் பங்குபற்றுவதற்கு பதிவுசெய்துகொள்ளுமாறு ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊதியமற்ற பராமரிப்புப் பணி பற்றி ஆதரித்துவாதிடுவோருக்கு அழைப்புவிடுக்கின்றோம்.**

2022, ஒக்டோபர் 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில்

இலங்கையில் (ZOOM தொழில்நுட்பம் ஊடாகவும்)

9.00 மு.ப - 5.00 பி.ப







## ஊதியமற்ற பராமரிப்புப் பணி எனும் கருத்தேற்பு

அடிப்படையில், ஊதியமற்ற பராமரிப்புப் பணி எனும் கருத்தேற்பு குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள குடும்பத்தவர்களின் நல்வாழ்வுக்காக வீட்டினுள் புரியப்படுகின்ற பணிகளை மையப்படுத்துகின்றது. ஊதியமற்ற வீட்டுப் பணி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பராமரிப்பு என்பவற்றுடன், பல்வேறு வழிகளில் குடும்பத்துக்கு ஆதரவளிக்கும் சமூக வலையமைப்புக்களைப் பேணுதல் போன்ற தன்னார்வ அடிப்படையிலான செயற்பாடுகளும் இதனுள் உள்ளடங்குகின்றன. தெற்காசியாவிலுள்ள பெரும்பாலான குடும்பங்களில் இவ்வாறான செயற்பாடுகள் குடும்பத்திலுள்ள பெண் உறுப்பினர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன அல்லது அவற்றை மேற்கொள்வதற்கான முதன்மைப் பொறுப்பு பெண்களுக்கே உள்ளதெனக் கருதப்படுகின்றது. இப்பணியானது சமூக மற்றும் பொருளாதார பெறுமானத்தைக் கொண்டுள்ளதுடன், அப்பெறுமானம் குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் மற்றும் பாரிய பொருளாதார விஸ்தீரணத்துக்கும் முக்கியமானதும் ஆகும். எவ்வாறிருப்பினும், ஊதியமற்ற பராமரிப்புப் பணிக்கான உழைப்பு, நேரம் மற்றும் பெறுமானம் என்பன பிரதான பொருளாதாரத் திட்டமிடுநர்களால் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. இப்பணி பெண்களினதும் ஆண்களினதும் பால்நிலைமயப்படுத்தப்பட்ட வகிபாகங்கள் எனும் போர்வையில் இன்னும் நோக்கப்படுவதே அதற்கான காரணமாகும்.

இம்மாநாடானது ஆய்வின் முடிவுகள் பற்றிக் கலந்துரையாடி அவற்றைப் பகிர்ந்துகொள்ளுதல், ஊதியமற்ற பராமரிப்புப் பணி பற்றி சிறப்பாக புரிந்துகொள்ளுதல் மற்றும் பொருளாதாரத்திற்கான அதன் முக்கியத்துவம் எவ்வழிகளில் காணப்படுகின்றது என்பதை ஆய்ந்தறிதல் ஆகிய விடயங்களுக்காக, பெண்களின் பிரச்சினைகள் தொடர்பில் செயற்படும் ஆய்வாளர்களையும் செயற்பாட்டாளர்களையும் ஒன்றிணைக்கவுள்ளது. இம்மாநாட்டில், இலங்கை விவகாரம் தொடர்பான சிறு ஆவணத் தொகுப்பும் இடம்பிடிக்கவுள்ளது.

Web: womenandmedia.org/

**REGISTER NOW**
**ONLINE REGISTRATION FORM**

Email: UCW.SAconf@gmail.com

# ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் நிகழ்ச்சிநிரல்

## DAY 1

| | |
|---|---|
| 09.45 மு.ப. – 11.15 மு.ப | சிறப்புரை: கலாநிதி. தீப்தா சொப்ரா, அபிவிருத்திக் கற்கைகளுக்கான நிறுவகம், சசெக்ஸ் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம். |
| | ஊதியமற்ற பராமரிப்புப் பணியை அங்கீகரித்தல், குறைத்தல் மற்றும் மீள்பகிர்வு செய்தல்: இலங்கையின் 6 மாவட்டங்களின் ஆய்வு முடிவுகள் - WMC மற்றும் SSA ஆய்வுக் கற்கை – கலாநிதி. சேப்பாலி கோட்டேகொட, கலாநிதி. பிரதீப் பீரிஸ் மற்றும் ஸ்ருதி ஆகியோரினால் முன்வைக்கப்படும் அளிக்கை. |
| **குழாம் 1 –** | **பால்நிலைசார்ந்த பராமரிப்புப் பணி மற்றும் பொருளாதாரம்** |
| 11.30 மு.ப. – 01.00 பி.ப. | “குடும்பத்திலுள்ள அனைவரும்: பால்நிலை, சமூக இனவிருத்தி மற்றும் பராமரிப்பு பற்றிய அரசியல் பொருளாதாரம்” – மிச்செல் கம்பேர்ட், ஐக்கிய அமெரிக்கா. |
| | “தாய் மாத்திரமே செய்வார்: பெண்களின் புலம்பெயர்வு அபிலாஷைகளுக்கான அரசின் பதிலளிப்புக்களின் பகுப்பாய்வு” – சந்திமா அரம்பேபொல |
| **குழாம் 2 –** | **ஏன் ஊதியமற்ற பராமரிப்புப் பணியை அளவிடவும், அதற்கான பெறுமதியளிக்கவும் வேண்டும்?** |
| 03.15 பி.ப. - 04.10 பி.ப. | “2017ஆம் ஆண்டின் தேசிய நேரப் பயன்பாட்டுக் கணக்கெடுப்பைப் பயன்படுத்தி, இலங்கையில் ஊதியமற்ற பராமரிப்புப் பணியின் பெறுமானத்தை மதிப்பிடுதல்: முதலாவது மதிப்பீடுகள்” – பேராசிரியை. திலேனி குணவர்த்தன மற்றும் அஷ்வின் பெரேரா (20 – 30 நிமிட அளிக்கை) |
| | “ஊதியமற்ற பராமரிப்புப் பணியும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளும் (SDGs): ஊதியமற்ற பராமரிப்புப் பணியை அங்கீகரித்து அதன் பெறுமானத்தை மதிப்பிடுவதில் இலங்கையின் முன்னேற்றம்” – சுனிமாலி மதுராவல |

## DAY 2

| | |
|---|---|
| **குழாம் 3 –** | **சமூக ஊடகங்களில் முக்கியத்துவமளித்தலும் ஊதியமற்ற பராமரிப்புப் பணியும்** |
| 9.45 மு.ப. - 11.15 மு.ப. | சிறப்புரை: கலாநிதி. ஹரிணி அமரசூரிய |
| | “எனது கணவருக்கும் பிள்ளைகளுக்கும் சமைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்: ஊதியமற்ற பராமரிப்புப் பணி பற்றிய ஒன்லைன் சொற்பொழிவுகளின் பகுப்பாய்வு” – திஷானி சேனாரத்ன |
| | “ஊதியமற்ற பராமரிப்புப் பணி மீதான சமூக ஊடக இடையீடுகள்: பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பின் கண்ணோட்டங்கள்” – வேலாயுதன் ஜெயச்சித்திரா |
| | “நுண் தொழில்முயற்சியாளர்கள், சுயதொழில் செய்வோர், சமூக ஊடகம் மற்றும் ஊதியமற்ற பராமரிப்புப் பணி பற்றிய ஆய்வு” – நிர்மனி மற்றும் அபேக்ஸானி பெரேரா |
| **குழாம் 4 –** | **ஊதியமற்ற பராமரிப்புப் பணியில் கொவிட் 19 பெருந்தொற்றின் தாக்கம்** |
| 11.30 மு.ப. – 01.00 பி.ப. | “யார் பராமரிக்கின்றனர்: பெண்கள் மற்றும் பெருந்தொற்றின் போதும் அதற்கப்பாலுமான பராமரிப்புப் பொறுப்புக்கள்” – நாதியா நஜாப் |
| | “பாக்கிஸ்தான் அரசின் கொவிட் 19 பெருந்தொற்றுக்கான 'பராமரிப்பு' இல்லாத பதிலளிப்பு: லாகூரிலுள்ள முறைசாரா தொழிலாளர்களின் கண்ணோட்டங்கள். – தீப்தா சொப்ரா, ஷந்தனா மொஹமட் மற்றும் தேவனிக் சஹா |
| **குழாம் 5 –** | **ஊதியமற்ற பராமரிப்புப் பணியின் அடையாள அரசியல்** |
| 3.45 பி.ப. – 5.30 பி.ப. | “வெளிப்புற எல்லையிலிருந்து ஊதியமற்ற பராமரிப்புப் பணியை மீள்பரிசீலனை செய்தல்: போரினால் பாதிக்கப்பட்ட வட இலங்கைப் பெண்கள், வாழ்வாதாரம் மற்றும் சமூக இனவிருத்தி என்பவற்றுக்காக முகங்கொடுக்கும் சவால்கள்” – கலாநிதி. அகிலன் கதிர்காமர், சுகன்யா காண்டீபன், ஷபியா றபாய்து மற்றும் யதுர்ஷா உலகேந்திரன். |
| | “பெருந்தோட்டத் துறையிலுள்ள பெண்களினதும் ஊதியமற்ற பராமரிப்புப் பணியினதும் பெறுமதி” – கே. யோகேஸ்வரி |
| | “இலங்கையில் மாற்றுப்பாலினர்களுக்கு மத்தியில் காணப்படும் பால்நிலைமயப்படுத்தப்பட்ட உழைப்பினதும் ஊதியமற்ற பராமரிப்புப் பணியினதும் இயக்கவியலை ஆராய்ந்தறிதல்” – கலாநிதி. கௌஷல்யா ஆரியரத்ன மற்றும் தேனு ரங்கேத் |